**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110237

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி
   PS காவல்நிலையம்: 2ம் [illegible]
   Year ஆண்டு: 2023
   FIR No. மு.த.அ. எண்: 01/AC/2023
   Date நாள்: 14.02.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை 25.01.2023 at 11.10 hrs 09.02.2023 at 15.00 hrs and
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை 10.02.2023 at 15.15 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2023
   Time நேரம் : 06.30. hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — வட்டாட்சியர் அலுவலகம், ஓசூர். கிருஷ்ணகிரி மாவட்டம். சுமார் 55 kms மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — உ. அரவிந்தன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு. [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 39/2022
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் — —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் — —
   (f) Occupation : தொழில் — வியாபாரம்
   (g) Address : முகவரி — எண்: 11, 4-வது குறுக்கு தெரு, கிருஷ்ணா நகர், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. [illegible], தனி வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு
—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்
—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
—

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. Aravindan

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.02.2023 At 09.50 hrs

Name: பெயர் R. உதயன்
Rank: நிலை காவல் துணை No. கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புப்பிரிவு,
திருச்சி.

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2023, u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி .

******

இன்று 14.02.2023 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், கிருஷ்ணா நகர், 4-வது குறுக்குத்தெரு, கதவு எண்.11-ல் வசித்து வரும் வடிவேல் மகன் திரு.வ.அரவிந்தன், வயது-39 என்பவர் அலுவலகம் வந்து எழுத்துமூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

******

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், கிருஷ்ணா நகர், 4-வது குறுக்குத்தெரு, கதவு எண்.11-ல் வசித்து வருகிறேன். நான் B.E படித்துள்ளேன். கிருஷ்ணகிரி மாவட்டம், HIG-52, ஆவலபள்ளி ஹவுஸ்சிங் போர்டு, பஞ்சாப் நேஷனல் பேங்க் எதிரே பாகலூர் ரோட்டில் Little Ville Premium Pre School என்ற பெயரில் மழலையர் பள்ளியை கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுகா, பாஸ்தி, ஆவலப்பள்ளி ஹட்கோ கதவு எண்.MIG 149 என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி.மஞ்சுளா ரவிக்குமார் என்பவர் கடந்த 2019 முதல் நடத்தி வருகிறார். அந்தப்பள்ளியில் சுமார் 39 மழலை சிறார்கள் படித்து வருகிறார்கள். மேற்படி மழலையர் பள்ளி செயல்படும் கட்டிடமானது கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தாலுகா, அங்கிநாயனபள்ளி அஞ்சல், குண்டியால் நத்தம் கிராமம், கதவு எண்.3/266-ல் வசிக்கும் திரு.C.கண்ணப்பன் என்பவருக்கு சொந்தமானதாகும். அந்த கட்டிடத்தை கடந்த 19.04.2019-ல் எழுதப்பட்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்த பத்திரத்தின் பேரில் திருமதி.மஞ்சுளா ரவிக்குமார் பெற்று மேற்படி பள்ளியை நடத்தி வருகிறார். மேற்படி பள்ளியை வாங்கி என் பெயரில் நடத்தலாம் என்று முடிவு செய்து மேற்படி பள்ளியின் தாளாளராகவும், முதல்வராகவும் செயல்பட்டு வரும் திருமதி.மஞ்சுளா ரவிக்குமார் அவர்களை தொடர்புகொண்டு பேசினேன். அவரும் மேற்படி மழலையர் பள்ளிக்கு தீயணைப்பு அலுவலக தடையில்லா சான்று, பொதுக்கட்டிட சான்று உட்பட பல்வேறு சான்றுகள் பெறப்படாமல் இருப்பதால் அரசு அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்காமல் இருப்பதாகவும், அந்த சான்றுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பெற்றுவிட்டால் பள்ளிக்கான அனுமதியை பள்ளிக்கல்வித்துறையிலிருந்து பெற்றுவிடலாம் எனவும் தெரிவித்தார். மேலும் அந்த சான்றுகளை அவரால் அலைந்து வாங்க முடியாது என்றும், அதனை தற்போது

செயல்பட்டு வரும் பள்ளியின் பெயரிலேயே வாங்கிவிடுங்கள் அதன்பின்பு பள்ளியை உங்கள் பெயருக்கு மாற்றிவிடலாம் என்று தெரிவித்தார். அதன்பேரில் நானும் முயற்சி செய்து கடந்த 29.06.2022 அன்று தடையின்மை சான்றை நிலைய அலுவலர், தீயணைப்பு மீட்பு பணி நிலையம், சிப்காட், ஒசூர் அவர்களிடமிருந்து பெற்றேன். அதன்பின்னர் பொது சுகாரத்துறை துணை இயக்குநர், கிருஷ்ணகிரி அவர்களிடமிருந்து சானிட்டரி சான்றிதழை 31.10.2022 அன்று பெற்றேன். அதன்பின்னர் பொதுக்கட்டிட அனுமதியை ஒசூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெற வேண்டியிருந்தது. அதற்காக கடந்த 25.01.2023–ம் தேதி பொதுக்கட்டிட அனுமதி சான்று வேண்டி ரூ.1,000/–த்தை கட்டணமாக வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கணக்கில் சலான் எண்.20230125008890–ன்படி ஆன்லைனில் செலுத்தினேன். பின்னர் அன்றே ஒசூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று வட்டாட்சியர் திரு.கவாஸ்கர் அவர்களை சுமார் 11.00 மணிக்கு சந்தித்து Little Ville Premium Pre School முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு வழங்கிய மனுவுடன் 1) Rs.1000/Remitted challan, 2) Xerox copy of Sanitary Certificate, 3) Xerox copy of Fire License, 4) Stability Certificate ஆகியவற்றின் நகல்களை இணைத்து கொடுத்தேன். அதனை வாங்கி பார்த்த ஒசூர் தாசில்தார் திரு.கவாஸ்கர் அவர்கள் என்னிடம் திரும்ப கொடுத்து துணை தாசில்தார் திருமதி.மங்கையர்கரசி அவர்களை சென்று சந்தித்து கொடுக்குமாறு தெரிவித்தார். நானும் சுமார் 11.10 மணிக்கு துணை தாசில்தார் திருமதி.மங்கையர்கரசி அவர்களை சந்தித்து மேற்படி மனுவை அவரிடம் கொடுத்தேன். அதனை வாங்கி பார்த்த திருமதி.மங்கையர்கரசி அவர்கள் பொதுக்கட்டிட அனுமதி சான்று வழங்கிட கோப்புகளை தயார் செய்து நடவடிக்கை எடுக்க அவருக்கு லஞ்சமாக ரூ.50,000/– கொடுத்தால் செய்வதாக தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்றும் தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 09.02.2023 அன்று மதியம் சுமார் 03.00 மணிக்கு ஒசூர் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று துணை தாசில்தார் திருமதி.மங்கையர்கரசி அவர்களை சந்தித்து எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து கேட்டேன். அதற்கு திருமதி.மங்கையர்கரசி அவர்கள் என்னிடம் 10.02.2023 அன்று ஒசூர் தாசில்தார் அவர்கள் Little Ville பள்ளியை களஆய்வு செய்ய இருப்பதாகவும் அதற்கு ஏற்பாடுகளை செய்யுமாறும் என்னிடம் தெரிவித்தார். மேலும் ஏற்கனவே

கேட்ட பணம் ரூ.50,000/-த்தை தயார் செய்து கொடுக்குமாறும் தெரிவித்தார். நான் ஏதேனும் குறைத்துக்கொள்ள முடியாதா மேடம், அவ்வளவு பணம் தயார் செய்ய இயலாது என்று தெரிவித்தேன். ஆனால் திருமதி.மங்கையர்கரசி அவர்கள் ஏற்கனவே கேட்டவாறு ரூ.50,000/- கொடுத்தால்தான் கோப்பை தயார் செய்து, தாசில்தாரிடம் வைக்க முடியும் என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். நானும் திரும்ப வந்துவிட்டேன். பின்னர் 10.02.2023 அன்று சுமார் 12.30 மணிக்கு நான் ஒசூரில் உள்ள Little Ville பள்ளியில் தாசில்தார் வருகைக்காக காத்திருந்தேன். அப்போது சுமார் 12.45 மணியளவில் ஒசூர் தாசில்தார் திரு.கவாஸ்கர் அவர்கள் அவரது அலுவலக ஜீப்பில் டிரைவர் மற்றும் மற்றொரு உதவியாளருடன் வந்து பள்ளியை ஆய்வு செய்துவிட்டு சுமார் 01.00 மணிக்கு கிளம்பிச் சென்றுவிட்டார். நான் அதற்கு பின்னர் அன்றே ஒசூர் தாசில்தார் அலுவலகம் சென்று மதியம் சுமார் 03.15 மணியளவில் துணை தாசில்தார் திருமதி.மங்கையர்கரசி அவர்களை சந்தித்து விண்ணப்பத்தின் நிலை குறித்து கேட்டேன். அதற்கு திருமதி.மங்கையர்கரசி அவர்கள் என்னிடம் தாசில்தார் களஆய்வு செய்துவிட்டதால் சான்றிதழை தயார் செய்துவிடலாம் ஆனால் ஏற்கனவே கேட்ட படி ரூ.50,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும், அவ்வாறு செய்யாவிட்டால் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறினார். நான் அவ்வளவு பணம் இல்லையென்று கூறி, ஏதாவது குறைத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தேன். அப்போது திருமதி.மங்கையர்கரசி அவர்கள் என்னிடம் இருங்கள் தாசில்தாரிடம் கேட்டுவிட்டு வருகிறேன் என்று தெரிவித்துவிட்டு தாசில்தார் ரூமிற்குள் சென்றுவிட்டு வந்து ரூ.40,000/- கொடுங்கள் என்று என்னிடம் கூறினார். மேலும் கூடுதலாக ரூ.2,000/- கொடுங்கள் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் ரூ.42,000/- தர வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் அவ்வளவு தராவிட்டால் நடவடிக்கை எடுக்க முடியாது பணத்தை தயார் செய்துகொண்டு வந்து எப்பொழுது வேண்டுமானாலும் அலுவலகத்தில் வந்து பாருங்கள் வேலையை முடித்து தருகிறேன் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். நானும் திரும்ப வந்துவிட்டேன். நான் லஞ்சமாக பணம் ரூ.42,000/- கொடுத்து என்னுடைய பணியை முடிக்க விருப்பமில்லை. என்னிடம் பொதுக்கட்டிட அனுமதி சான்று வழங்க நடவடிக்கை எடுக்க ரூ.42,000/- லஞ்சம் கேட்ட ஒசூர் துணை தாசில்தார் திருமதி.மங்கையர்கரசியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன்

கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் வ.அரவிந்தன், 14.02.2023. Sir, Received the written complaint on 14.02.2023 at 06.30 hrs and further between 06.35 hrs and 07.10 hrs,, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with her personally, was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Krishnagiri V&AC, Cr.No.01/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 14.02.2023 at 07.15 hrs against the accused. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Krishnagiri and remaining copies are sent to the officers concerned.

(R.VADIVELU) 14/02/2023
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Krishnagiri.